# பாடம் 37: திருநிலைகள் (திருத்தொண்டர்கள்)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 11 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 11 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
நாம் திருநிலைகள் அருளடையாளம் குறித்து கற்கத் தொடங்கியுள்ளோம். இறைமக்களுக்குப் பணி செய்வதற்காக திருப்பணி குருத்துவத்தின் பகுதியாக அழைக்கப்படும் ஆண்களே திருநிலைகளுக்குள் ஏற்கப்படுகின்றனர் என்பதை நாம் கற்றுள்ளோம். இந்த பாடத்தில், திருச்சபையில் திருத்தொண்டர்களின் வகிநிலை பற்றி நாம் அறிவோம்.

**தற்போதைய பாடம்:**
1. திருத்தொண்டர் வகிநிலை குறித்து புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறோம்:

*1 திமொத்தேயு 4:6*: "நீ இந்த அறிவுறுத்தல்களைச் சகோதரர்களுக்கு (சகோதரிகளுக்கு) வழங்கினால், கிறிஸ்து இயேசுவின் நல்ல திருத்தொண்டனாய் (தியாக்கொனோஸ்) இருப்பாய்."

*1 திமொத்தேயு 3:8-9*: "அவ்வாறே, திருத்தொண்டர்களும் (தியாக்கொனோஸ்) கண்ணியம் உடையவர்களாக இருக்க வேண்டும். ஏய்க்கிறவர்களாக, குடிவெறிக்கு அடிமையானவர்களாக, இழிந்த ஆதாயத்தில் பேராசை உள்ளவர்களாக இருத்தலாகாது, தெளிந்த மனச்சான்றோடு விசுவாசத்தின் மறைபொருளைக் காத்துவர வேண்டும்."

2. *உலகின் ஒளி, 29*: "படிமையின் கீழ் மட்டத்தில் திருத்தொண்டர்கள் இருக்கின்றனர், 'குருத்துவத்திற்காக அன்றி, தொண்டின் திருப்பணிக்காக' அவர்கள் மீது கைகள் வைக்கப் படுகின்றன. அருளடையாள அருளால் வலுவூட்டப் பெற்று, ஆயரோடும் அவரது குருக்கள் குழுவோடும் ஒன்றிணைந்து, அவர்கள் திருவழிபாட்டின், வார்த்தையின், மற்றும் இறைமக்களின் சேவையில் திருத்தொண்டு செய்கின்றனர். தகுந்த அதிகாரியால் தமக்கு ஒதுக்கப்பட்டதற்கு ஏற்ப, ஆடம்பரமாகத் திருமுழுக்கு வழங்குதல், நற்கருணையைப் பாதுகாத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல், திருச்சபையின் பெயரால் திருமணங்களுக்கு ஆசியளித்தல் மற்றும் உதவுதல், இறக்கும் நிலையில் உள்ளோருக்கு வழியுணவு கொணர்தல், விசுவாசிகளுக்குப் புனித மறைநூலை வாசித்தல், மக்களுக்கு அறிவுறுத்துதல் மற்றும் ஊக்கமளித்தல், விசுவாசிகளின் மன்றாட்டையும் வழிபாட்டையும் நடத்துதல், அருள்குறிகளை நிறைவேற்றுதல், இறுதி மற்றும் அடக்கச் சடங்குகளை நடத்துதல் ஆகியவை திருத்தொண்டரின் பொறுப்பாக இருக்கிறது. பிறரன்பு பணிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டு, செயல்படுத்துகிறவர்களாய், பேறுநிறை பொலிகார்ப்பின் திருத்தொண்டர்கள் கவனம் செலுத்துவார்களாக: 'இரக்கமுள்ளவர்களாக, தளரா ஊக்கமுள்ளவர்களாக இருங்கள், எல்லாருக்கும் தொண்டராக மாறிய ஆண்டவரின் உண்மைக்கு ஏற்ப நடங்கள்.'"

3. ஒரு திருத்தொண்டர் ஆயரின் கண்களாகவும் காதுகளாகவும் செயல்படுகிறார். அவர் வார்த்தை (கற்பித்தல், போதித்தல்), பிறரன்பு (ஏழைகள் மற்றும் விளிம்புநிலையினரைக் கவனித்தல்), மற்றும் பலிபீடத்தின் (ஆயர் மற்றும் குருக்களுக்கு திருப்பலிகளில் உதவுதல், பொது செபங்களை நடத்துதல், திருப்பலியில் நற்செய்தி பறைசாற்றுதல்) திருப்பணியாளராக இருக்கிறார்.

4. திருத்தொண்டர்கள் (தங்கள் குருத்துவத்தின் பாதையில்) இடைநிலையினராக அல்லது நிரந்தரமாக இருக்கலாம். திருமணமான ஆண்கள் நிரந்தரத் திருத்தொண்டராக திருநிலைப்பாடு பெறலாம்; அவர்கள் திருநிலைப்பாடு பெற்றாலும் திருமண வாழ்வைத் தொடர்கின்றனர், ஆனால் அவர்களது மனைவியர் இறந்தால், அவர்கள் மற்றத் திருப்பணியாளர்களைப் போன்று மணத்துறவு வாழ்வு வாழ வேண்டும். தனித்த ஆண்கள் திருத்தொண்டரானால், அவர்கள் திருநிலைப்பாட்டின் பொழுது மணத்துறவு வாக்குறுதி அளிக்க வேண்டும்.

5. ஒரு திருத்தொண்டர் வழக்கமாக "திருத்தொண்டர்" என்று அழைக்கப்பட்டாலும், எழுத்தில் தல வழக்கிற்கு ஏற்ப மரியாதைக் குறிப்போடு சுட்டப்படுகின்றனர் ("மதிப்புறு திருத்தொண்டர்", "மதிப்புறு திருவாளர்").

6. ஒரு திருத்தொண்டர் திருமுழுக்கு மற்றும் திருவிருந்தின் வழமை திருப்பணியாளராக இருக்கின்றார். நற்கருணை வசீகரம் தேவைப்படாத திருமணங்கள் மற்றும் அடக்கச் சடங்குகளையும் அவர் நடத்தலாம்.

7. ஆசிவழங்கலில் குறிப்பிட்டு வேறுவிதமாக கூறப்பட்டால் தவிர, மக்கள், பொருள்கள், மற்றும் இடங்களுக்கு ஒரு திருத்தொண்டர் ஆசி வழங்கலாம்.

8. பெரும்பாலான நிரந்தரத் திருத்தொண்டர்கள் சொந்தத் தொழிலில் ஈடுபடுகின்றனர், அதேவேளை தங்கள் ஆயருக்காக முழுநேரமும் உழைக்கிறவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சொந்தத் தொழில்களில் ஈடுபடுவோருக்குத் திருச்சபை ஊதியம் வழங்குவதில்லை.

9. அருள்பணியாளர்கள் எல்லா நேரங்களிலும் அருள்பணி உடைகளை அணிந்திருக்கிறதைத் திருச்சபை சட்டம் கடமையாக்கியுள்ளது (சட்டம் 284). அது உரிமையும் கடமையும் ஆகும். (மலேசியாவில் அருள்பணி உடைகளை அணிந்திருக்கிறது கட்டாயமில்லை என்றத் தல வழக்கம் உருவாகியுள்ளது.)

10. நிரந்தரத் திருத்தொண்டர்கள் வழக்கமாக தங்களது திருப்பணிக்குப் பயனுள்ள இடத்தில் அருள்பணி உடையை அணிந்திருக்க அனுமதிக்கப்படுகின்றனர். அது ஓர் உரிமை, ஆனால் ஒரு கடமையன்று. ஆனால் இது அவர்களது ஆயரின் நிபந்தனைக்கும் உட்பட்டது.

11. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில், ஒரு திருத்தொண்டர் நீளங்கி, திருப்பட்டை மற்றும் தொண்டுடையை அறிந்திருக்கிறார். திருப்பலி அல்லாதத் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் அவர் சூழணிகையும் பயன்படுத்தலாம்.

12. திருத்தூதர் பணிகள் 6ஆம் அதிகாரம், திருத்தூதர்களின் நாட்களில் திருச்சபையின் முதல் ஏழு திருத்தொண்டர்களின் தேர்வு குறித்து நமக்குச் சொல்கிறது. அவர்கள் தங்களது நேரியச் செயல்களால் வியப்பூட்டும் நபர்களாகவும் ஆனார்கள்.

அ) **புனித ஸ்தேவான்**. திருத்தூதர் பணிகள் (6, 7 அதிகாரங்கள்) திருத்தொண்டர் ஸ்தேவான் குறித்துச் சற்றுப் பகிர்கின்றது. தேவையில் இருந்தோருக்குப் பணியாற்றும் தமது கடமையைத் தாண்டி அவர் சென்றார். அவர் போதித்து, பெரும் அற்புதங்களையும் அடையாளங்களையும் நிகழ்த்தினார். புனித ஸ்தேவான் இறுதியாக தமது விசுவாசம் மற்றும் திருப்பணிக்காகக் கல்லெறிந்து கொல்லப்பட்டார். அவர் (புதிய ஏற்பாட்டு) திருச்சபையின் முதல் மறைச்சாட்சி என்று அறியப்படுகிறார், ஆகவே "முன்மறைச்சாட்சி" என்பது அவரது புகழ்பெற்றப் பட்டமாக இருக்கிறது.

ஆ) **புனித பிலிப்பு (திருத்தொண்டர்)**. இவர் சில நேரங்களில் திருத்தொண்டர் என்றும், சில நேரங்களில் நற்செய்தியாளர் என்றும் அழைக்கப்படுகிறார். கொர்னேலியுவே கிறிஸ்தவத்திற்கு மனந்திரும்பிய முதல் பிறஇனத்தவர் பெரும்பாலானோர் கருதினாலும், புனித பிலிப்பிடம் திருமுழுக்கு பெற்ற எத்தியோப்பிய நிதியமைச்சரே மெய்யாக முதலானவராக இருக்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர் (திப 8:26-40).

இ) **புனித பிரக்கோர்**. மறைநூல் இவரைக் குறித்து மிகச் சிறிதே கூறுகிறது, பிரக்கோர் தூய ஆவியால் நிரப்பப்பட்டிருந்தார், தொடக்ககால யூதக் கிறிஸ்தவர்களால் மதிக்கப்பட்டார். கிறிஸ்துவால் நியமிக்கப்பட்ட 70 பேரில் இவரும் ஒருவர் என்று சிலர் கூறுகின்றனர் (லூக் 10:1-20), இவர் பின்னர் நிக்கோமீதியாவின் ஆயரானார்.

ஈ) **புனித நிக்கானோர்**. புனித ஸ்தேவான் கல்லெறியப்பட்ட வேளையில், நிக்கானோரும் சேர்ந்து துன்புற்றார் என்ற நம்பிக்கை மரபில் இருக்கிறது. புனித நிக்கானோரும் லூக்கா 10ஆம் அதிகாரம் குறிப்பிடும் 70 பேரில் ஒருவராக இருந்திருக்கலாம்.

உ) **புனித தீமோன்.** நோயுற்றோருக்கு நலமளிக்கிற மற்றும் தீய சக்திகளை அழிக்கிறக் கொடைகளை புனித தீமோன் பெற்றிருந்ததாக நம்பப்படுகிறது, இவர் கிரேக்க நாட்டில் மறைச்சாட்சியானார்.

ஊ) **புனித பர்மனா.** எருசலேமில் தேவையிலிருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு உதவியதோடு, நல்ல மனிதர் என அறியப்பட்டார், பர்மனா சின்ன ஆசியாவில் (துருக்கி) போதித்து, பிலிப்பியில் (கிரேக்கம்) மறைச்சாட்சியானார் என சிலர் கூறுகின்றனர்.

எ) **அந்தியோக்கு புனித நிக்கொலா.** திருத்தூதர் பணிகள் 6:5 இவரைக் குறித்து சற்றுக் கூடுதல் தகவலை வழங்குகிறது. நிக்கொலா அந்தியோக்கைச் சேர்ந்தவர். இவர் யூதச் சமயத்திற்கு மாறியிருந்தார் என்றும் அறிகிறோம். மறைநூல் கூறுவதைத் தவிர, அந்தியோக்கு புனித நிக்கொலா குறித்து சிறிது தகவலே எழுதப்பட்டுள்ளது.